முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1218

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞானமே அரங்கா வாழ்க
   ஓங்கார சூட்சுமமே அரசா வாழ்க
   ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
   உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசிதன்னை
2. ஆசிதன்னை சுபகிருது கலைதிங்கள்
   (சுபகிருது வருடம் தை மாதம் 15 ம் நாள் 29.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
   அரங்கனுக்கு சக்தியூட்ட எடுத்துரைப்பேன்
   வாசிவென்ற தலைவர்கள் அனைவரும்
   வல்லமைபட அரங்கன் உன்சக்தியாக
3. ஆகவே கலந்து ஆற்றல் கூட்ட
   அரங்கன் மார்க்கமே உலகை ஆளக்கூடும்
   கூடாத எதிர்மறை சக்திகள் எல்லாம்
   குவலயத்தை விட்டு அரங்கன் சக்தியாலே
4. சக்தியாலே விரட்டப்பட்டு இனிதே
   சகலரும் சன்மார்க்க நெறியாக
   பக்திமிகு அரங்கன் சேவை வழி
   பழுதின்றி அரங்கன் தொண்டர்களாலே
5. தொண்டர்களால் உலகம் மாற்றம் பெறும்
   தூய ஞான ஆட்சி காலமாக
   உண்டாகும் சடுதி அரங்கன் உயர்கொள்கையால்
   உண்மைபட அரங்கன் தர்மத்தை உலகோர் ஏற்றுத் தொடர்ந்து வந்தால் சக்தி மிகு உலகப் பெருமாற்றம் சரவண சுடர்வழி ஒளியாக
6. ஆகவே என்றும் நிரம்பி இனிதே
   ஆறுமுகனார் வெளிப்பட இந்த மாற்றம்
   பெருமைபட அரங்கன் அவதாரத்தால்
   பிசகின்றி அரங்கேறும் ஆறுமுகன் என்வாக்கு
7. என்வாக்கு இனிதே அரங்கன் சக்தியாக
   இனிதே இந்தப்பேருலகம் முழுமைகண்டு
   கனிவேலவன் தலைமைகொண்ட எந்தன்ஆட்சியாக
   கலியுகத்தில் மாற்றம் சடுதிகாணும்
   ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–